## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் - 2013

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று. உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல்கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தினால் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காயிவின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை அரதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு முரண்பட்டிருத்தல்**

இலங்கை அரதுறை கணக்கீட்டு நியமம் 01 இன்படி, வருமானத்தின் மூலம் செலவினை ஈடுசெய்ய முடியாதெனினும், ஓர் அரசவங்கி மூலம் பெறப்பட்டிருந்த கடனுக்காக மீளாய்வாண்டினபோது செலுத்தப்பட்ட வட்டி ரூபா 491,738 முதலீட்டு வட்டிக்கெதிராக கழித்தெழுதப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கீழ்க் குறிப்பிடும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தின் சொத்தான 220 ஏக்கருக்கு அதிகமான காணிகளை விலைமதிப்பீட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் சுய உற்பத்திச் செயற்திட்டத்திதால் பெறப்பட்ட நிதியை முதலீடு செய்ததால் பெறப்பட்ட ரூபா 4,518,078 பல்கலைக்கழகத்தின் வருமானம் எனக் காட்டப்படுவதற்குப் பதிலாக அச் செயற்திட்டக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) ஆராய்ச்சி செலவாக பாதீட்டின்மூலம் ஒதுக்கப்பட்ட சகல நிதியும் வருடத்தின் செலவாகக் கணக்கிடும் நியமம் பல்கலைக்கழகத்தால் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. இதன்படி மீளாய்வாண்டின்போது உண்மையான ஆராய்ச்சிச் செலவினம் ரூபா 4,183,432 ஆக இருப்பினும், ஒதுக்கீடு செய்யப்பட்ட முழுத்தொகையான ரூபா 7,000,000 உம் செலவாகக் காட்டப்பட்டிருந்தது. ஆண்டுதோறும் இவ்வாறு செலவிடப்பட்டு மீதமான தொகை ஆராய்ச்சி நன்கொடை நிதியக் கணக்கின் மீதி என முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இம் மீதி 11,467,078 ஆக இருந்தது.

(ஈ) பல்கலைக்கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான வேலை ஆரம்ப முற்பணங்கள் வழங்கப்பட்டு பின்னர் கொடுப்பனவு செய்யப்பட்ட சிட்டைகளில் முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட்டிருந்தும், அவை நாட்குறிப்புப் பதிவுகளூடாக கணக்குகளில் சீராக்கப்பட்டிராததால் வேலை ஆரம்ப முற்பணக் கணக்கு ரூபா 2,065,676 மேலதிகமாகவும் நடைமுறைகளிலுள்ள வேலைக் கணக்கு அதே தொகையால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன.

(உ) சொத்துக்கள் பாவிக்கக்கூடிய நிலைக்கு வந்ததிலிருந்து அவற்றினுடைய பாவிக்கக்கூடிய காலம் பூராகவும் முறையாக பெறுமானத்தேய்வு செய்ய வேண்டுமெனினும், ரூபா 47,132,633 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நீர் செயற்திட்டத்திற்கு முன்னைய 02 வருடங்களுக்கு ரூபா 4,713,263 ஆன பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) பேராசிரியர் ஒருவரின் பெயரில் உள்ள நன்கொடை நிதியாக கணக்கின் (ENDOWMENT) மீதி நிதிக் கூற்றுக்களின் விபரப்பட்டியலில் ரூபா 52,625 எனக் குறிக்கப்பட்டிருந்தும் அது பேரேட்டுக் கணக்கில் ரூபா 102,625 எனக் காட்டப்பட்டிருந்ததால் ரூபா 50,000 ஆக வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) தனிநபர் கோவையின்படி பல்கலைக்கழகத்தின் முறிகளை மீறிய விரிவுரையாளர்களில் இருவரிடமிருந்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த தொகை ரூபா 1,354,676 ஆக இருப்பினும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,538,421 எனக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழ்க் குறிப்பிடும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) விவசாய பீடத்திற்கு உரியதென ரூபா 82,270 ஆக நிதிக்கூற்றுக்களிற் காட்டப்பட்டிராத கால்நடைச் சொத்துக்களின் பெறுமதியையும் மெய்மையாய்வையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவசியமான பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் கல்விசார் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 26,944,235 ஆன ஆராய்ச்சிப் படிகளுக்குத் தொடர்பான கணக்காய்வு ஐய வினாக்களுக்கு விடையளிக்கப்படாதிருந்ததுடன் கொடுப்பனவுகளின் சரியான தன்மையையும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

ஒரு வருடம் தொடக்கம் 06 வருடங்கள் வரைக்கும் தீர்க்கப்படாதிருந்த மொத்தம் ரூபா 75,000 ஆன 02 ஆராய்ச்சி முற்பணங்களின் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரைகூட அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சட்டம், விதிகள், பிரமாணங்கள் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | சட்டம், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்தின் கணினிமயப்படுத்தப்பட்ட நிலையான சொத்தக்கள் பதிவேடு 2010 திசெம்பர் 31 வரை மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டிருந்ததால் 2011 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2013 திசெம்பர் வரை கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 1,804.302,726 பெறுமதியான 15 நிலையான |

| | |
|---|---|
| | சொத்து வகைகள் கணக்காய்வின்போது திருப்திகரமாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 772(1) | 2013 ஆம் அண்டிற்கான வருடாந்த பொருட் சுற்றாய்வின்போது இனங்காணப்பட்ட 76 வகைகளுக்குரிய 1230 பொருட்களை பாவனைக்குதவாததாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1645 (ஆ) மற்றும் 1646 | மீளாய்வாண்டிற்கான வாகன ஓட்டப்பதிவுகள் மற்றும் வாகன சம்பவக் குறிப்பேடுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமையால் வருமானக் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டிருந்த எரிபொருள் செலவுகள் ரூபா 7,478,277 மற்றும் வாகன பராமரிப்புச் செலவுகள் ரூபா 4,436,025 என்பவற்றை திருப்திகரமாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. |

## 2.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

கீழ்க் குறிப்பிடும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உபவேந்தருடைய உத்தியோகபூர்வ வதிவிடத்தைச் சுற்றி மதில் அமைப்பதற்கு பல்கலைக்கழகத்தால் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 8,006,455 ஆக இருப்பினும் அச் செயற்பாடுகள் தொடர்பாக கொள்வனவு நடைமுறைகளின் போது கிடைக்கப்பெற்ற தகைமைவாய்ந்த ஆகக்குறைந்த விலைமனு ரூபா 8,013,185 ஆக இருந்த போதிலும் மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் ஆகக்குறைந்த விலைமனு என்பவற்றைக் கருத்திலெடுக்காது ரூபா 9,630,623 ஆக விலைமனு சமர்ப்பித்த வேறொரு ஒப்பந்தக்காரருக்கு நிர்மாணச் செயற்திட்டம் வழங்கப்பட்டதனால் பல்கலைக்கழக நிதியத்திற்கு ரூபா 1,617,438 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தினது பொறியியலாளர்கள் இருவர் உட்பட பொறியியலாளர் ஆளணியைக் கொண்ட பொறியியற் பிரிவு இருந்த போதிலும் உப வேந்தரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தைச் சுற்றி மதில் அமைக்கும் ஒப்பந்தத்தில் ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு மதிப்பிடப்பட்ட பெறுமதியில் நூற்றுக்கு 5.5 வீதம் ஆலோசகர் கட்டணம் செலுத்துவதற்கு இணங்கி மதில் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தில் ஆலோசகர் சேவையை பெறுவதற்காக அரச பொறியியற் கூட்டுத்தாபனத்திற்கு அந்த நடவடிக்கை வழங்கப்பட்டிருந்தது.

(இ) உபவேந்தரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தைச் சுற்றி மதில் அமைப்பதற்கான ஒப்பந்தம் தொடர்பான ஒப்பந்த ஆவணங்களில் உள்ளடங்கிய இணங்கப்பட்ட கேள்விப்படிவங்களில் காட்டப்பட்டிருந்த படியான வேலையைப் பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்ட நாளுக்காக ஒப்பந்தப் பெறுமதியின் நூற்றுக்கு 0.05 வீதத்துடன் மேலதிகமாக 10 வீதம் தாமதக் கட்டணமாக அறவிடப்பட வேண்டியிருந்தும் உடன்படிக்கை செய்யப்பட்ட வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய தினத்திலிருந்து 2014 ஒக்டோபர் 21 ஆந் திகதி வரையிலான தாமதம் 200 நாட்களுக்கு மேற்பட்டிருந்ததால் ஒப்பந்தப் பெறுமதியின் நூற்றுக்கு 10 வீதம் ஆன ரூபா 963,062 தாமதக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஒப்பந்தக்காலத்தை நீடிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்குள் பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் ரூபா 18,154.195 ஆன குறைவு ஏற்பட்டிருந்ததுடன் இதற்கு ஒப்பான முன்னைய ஆண்டின் குறைவு ரூபா 24,064,637 ஆக இருந்தால் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவில் ரூபா 5,910,442 ஆக அதிகரிப்பு காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது வெளிவாரி கற்கை நெறிகளின் வருமானம் ரூபா 36,970,653 ஆல் அதிகரித்திருந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு முக்கிய காரணியாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

மீளாய்வாண்டின்போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயலாற்றல்கள் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு இருந்தது.

### 4.1 (அ) பரீட்சைப் பெறுபேறுகள்

2013 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட இறுதியாண்டுப் பரீட்சைகள் மற்றும் பட்டத்திற்கான சித்தியடைதல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| விபரம் | பிரயோக விஞ்ஞானபீடம் | விவசாய விஞ்ஞான பீடம் | முகாமைத்துவ கற்கைகள் பீடம் | சமூக விஞ்ஞானம் மற்றும் மானுடவியல் பீடம் | மருத்துவ மற்றும் அதனோடு ஒத்த விஞ்ஞான பீடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மீளாய்வாண்டின்போது இறுதியாண்டுப் பரீட்சைக்காகத் தோற்றியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை | 204 | 88 | 344 | 464 | 230 | 1330 |
| வகுப்புக்களுடன் சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை | 74 | 61 | 32 | 409 | 69 | 645 |
| சாதாரண சித்திகளின் எண்ணிக்கை | 103 | 20 | 233 | 29 | 130 | 515 |
| மொத்த சித்திகளின் எண்ணிக்கை | 177 | 81 | 265 | 438 | 199 | 1112 |
| சித்திபெறாதவர்களின் எண்ணிக்கை | 204 | 07 | 79 | 26 | 31 | 170 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் பட்டப்படிப்பில் சித்திபெறாத மாணவர்களின் எண்ணிக்கையின் நூற்றுவீதம் | 13.23 | 7.9 | 22.9 | 5.6 | 13 | 12.7 |

(i) மீளாய்வாண்டினுள் 05 பீடங்களிலும் இறுதியாண்டுப் பரீட்சைகளுக்குத் தோற்றியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 1330 ஆக இருந்ததுடன் அதில் 170 மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெறாதிருந்ததுடன் அது பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் நூற்றுக்கு 12.7 சதவீதமாக இருந்தது.

(ii) மீளாய்வாண்டில் சமூக விஞ்ஞானம் மானுடவியல் பீடம் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீடம் தொடர்பான பட்டக்கற்கை நெறிகளின் பருவமுறை பரீட்சைப் பெறுபேறுகள் 05 மாதங்கள் தொடக்கம் 10 மாதங்கள் வரையான கால தாமதத்துடன் வெளியிடப்பட்டிருந்தன.

(iii) பிரயோக விஞ்ஞான பீடத்தினதும் விவசாய விஞ்ஞான பீடத்தினதும் பருவமுறை பரீட்சைகள் நடாத்துதல் மற்றும் அவற்றின் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அந்தப் பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பான வினைத்திறன் குறித்து பரிசீலனை செய்வதற்கு முடியாதிருந்தது.

(iv) மருத்துவ மற்றும் அதனோடு ஒத்த விஞ்ஞான பீடத்தின் சகல பரீட்சைகளும் தொடர்பான பெறுபேறுகள் 11 நாட்களிலிருந்து 82 நாட்கள் வரையான காலப்பகுதிக்குள் வழங்கப்பட்டிருந்தன.

**(ஆ) ஒரு மாணவருக்கான கிரயம்**

மீளாய்வாண்டின்போது ஒவ்வொரு பீடத்தினதும் மொத்த மீண்டெழும் கிரயம் மற்றும் ஒரு மாணவருக்கான கிரயம் என்பன கீழே காட்டப்படுகின்றன.

| | விவசாய பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | சமூகவியல் மற்றும் மானுடவியல் பீடம் | முகாமைத்துவ பீடம் | மருத்துவ மற்றும் அதனோடு ஒத்த விஞ்ஞான பீடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மொத்தக் கிரயம் (ரூபா. 000) | 83,772,217 | 93,057,757 | 73,651,200 | 103,993,620 | 130,270,559 | 484,745,353 |
| மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 427 | 862 | 1292 | 1731 | 1090 | 5402 |
| ஒரு மாணவருக்கான கிரயம் (ரூபா 000) | 196,188 | 107,956 | 57,006 | 60,077 | 119,514 | 89,734 |

ஏனைய பீடங்களுடன் ஒப்பிட்டதாக விவசாய பீடத்திற்கு குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் சேர்க்கப்பட்டமை ஒரு மாணவருக்கான கிரயம் அதிகரித்திருந்தமைக்குக் காணரமாக இருந்தது.

இ. விரிவுரைகள் நடாத்துவதின் முன்னேற்றம்

(i) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடமும் தொடர்பாக நடைபெற்றிருந்த விரிவுரைகள் பற்றியும் இதே போன்ற கல்விசார் செயற்பாடுகள் குழுவின் முன்னேற்றத்தை அளவிடலும் தொடர்பாக இருந்த ஒரேயொரு ஆவணச்சான்று ஒவ்வொரு விரிவுரைக்கும் சமூகமளித்த மாணவர்களது வரவை பதிவு செய்த கையெழுத்துப் படிவம் மட்டுமே என்பதுடன் அப்பிரிவுத் தலைவர்களுக்கோ பீடாதிபதிகளுக்கோ ஒவ்வொரு பாடத்திற்கோ அல்லது விடயத்திற்கோ தொடர்பான விரிவுரையாளர்களின் மொத்தமான முன்னேற்றத்தை மேற்பார்வை செய்வதற்குப் போதுமான ஓர் உள்ளகக் கட்டுப்பாட்டு முறை இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டிருந்தது. அதன்படி பிரிவுத் தலைவர்களினதும் பீடாதிபதிகளினதும் கல்விசார் செயலாற்றல் போதுமானளவு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டு தொடர்பாகத் தயாரிக்கப்பட்டிருந்த செயற்பாட்டுத்திட்டத்தினுள் கல்விசார் செயலாற்றல் தொடர்பாக பௌதீக ரீதியான இலக்கு காட்டப்படாதிருந்ததால் வருட இறுதியில் இலக்கு அடையப்பட்டிருந்தமை தொடர்பாக கணக்காய்வு மதிப்பீடு செய்யமுடியாதிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

(அ) பல்கலைக்கழகத்திற்குரிய திருத்தம் செய்யப்பட்டு உபயோகிக்ககூடிய நிலையில் இருந்த வான் வண்டியை திருத்தம் செய்யாமல் மீளாய்வாண்டினுள் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களுக்காக ரூபா 873,168 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக சுற்றாடலில் அமைக்கப்பட்டிருந்த 40 பொலிஸ் உத்தியோகபூர்வ வதிவிடங்களையும் அந்தக் காணியையும் பல்கலைக்கழகத்திற்கு உரிமையாக்குவதற்கு திறைசேரியால் வழங்கப்பட்டிருந்த ரூபா 18 மில்லியன் நிதியும் அதற்காக பெறப்பட்ட வட்டியுமாக ரூபா 29 மில்லியன் ஒதுக்கு இருந்த போது அந்த நிதியைக் கொடுத்து பொலிஸ் உத்தியோகபூர்வ வதிவிடத்தை உரிமையாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மாணவர் விடுதிக்காக 48 தனியார் வதிவிடங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டதால் பல்கலைக்கழக

நிதியிலிருந்து மீளாய்வாண்டினுள் ரூபா 21,318,000 ஆன பணம் விடுதி வாடகைக்காக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) திருப்பிக் கொடுக்கப்படாத நூல் நிலையப் புத்தகங்கள்

(i) பிரதான நூல் நிலையத்தில் இருந்து ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் கல்வி சார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் 56 பேரினால் பெறப்பட்ட 167 புத்தகங்கள் குறித்த திகதிக்கு அப்பால் 06 மாதங்கள் தொடக்கம் 07 வருடங்கள் வரையான காலம் ஆகியிருந்தும் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) விவசாய பீட நூல் நிலையத்திலிருந்து 04 விரிவுரையாளர்களால் பெறப்பட்ட 11 புத்தகங்கள் 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் 04 மாதங்கள் தொடக்கம் 05 வருடங்கள் வரையான காலம் ஆகியிருந்தும் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாடற்ற சொத்துக்கள்

ஒரு அரசவங்கிக் கிளையில் பேணப்படும் கணக்கில் ரூபா 906,230 ஆன மீதி 2012 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்றிருந்தது.

### 4.4 தாமதமான செயற்திட்டங்கள்

விவசாய பீடத்தை விரிவாக்கும் நடவடிக்கைக்காக 15 ஏக்கர் வரையிலான ஒரு காணியை உரித்தாக்குவதற்காக 2011 ஆம் ஆண்டின்போது மத்திய நுவரகமபலாத பிரதேச செயலர்களிடம் ரூபா 7,200,000 ஆன தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்தும் 2014 யூன் மாதம் வரைக்கும் இது தொடர்பான உரித்தாக்கல் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.5 ஆளணி நிருவாகம்

(அ) மீளாய்வாண்டின்போது கல்விசார் ஊழியர்களில் 118 பதவிகளும் கல்விசாரா ஊழியர்களில் 72 பதவிகளும் வெற்றிடங்களாக இருந்தன.

(ஆ) கல்விசார் ஊழியர்களில் வெற்றிடங்கள் நிலவிய போதிலும் குறிப்பிடப்பட்ட பாட விடயங்கள் தொடர்பாக 14 மேலதிக விரிவுரையாளர்கள் இருந்ததுடன் 35 விரிவுரையாளர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கற்கைகள் தொடர்பாக கல்வி விடுமுறையிலும் இரண்டு விாவுரையாளர்கள் ஏழு வருடாந்த விடுமுறை பெற்றும் மீளாய்வாண்டின்போது பல்கலைக்கழகத்திலிருந்து நீங்கியிருந்தனர். அதன்படி, மீளாய்வாண்டின்போது கல்வி நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்ள முடியாத கல்விசார் ஊழியர்களின் எண்ணிக்கை 155 ஆக இருந்ததுடன் அதனை அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கையின் நூற்றுவீதமாக எடுக்கும் போது நூற்றுக்கு 52 வீதமாக இருந்தது. நிலவும் அதிக வெற்றிடங்களின் காரணமாக 179 வெளிவாரி விரிவுரையாளர்களுக்காக வரிவுரைக் கட்டணங்களாக ரூபா 12,832,113 செலுத்தி அச் சேவைகள் பெறப்பட்டிருந்தன.

(இ) பல்கலைக்கழகத்தின் உண்மையான மற்றும் அனுமதிக்கப்பட்ட ஆளணிப் பதிவுகளின்படி 2013 ஆம் ஆண்டின்போது பல்கலைக்கழகத்தின் பதவிநிலைசாராப் பதவிகளில் 64 வெற்றிடங்கள் மாத்திரமே நிலவியதுடன் அந்த வெற்றிடங்களைக் கருத்திலெடுக்காது ஊழியவழங்கல் பிரிவின் மூலமாக வழங்கப்பட்ட ஊழியவழங்கல் சேவைக்காக தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத ஊழியர்கள் மற்றும் கணிணி உதவியாளர்களாக 109 பேருக்கு மீளாய்வாண்டின்போது ரூபா 15,143,478 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக திறைசேரியினதோ

உயர்கல்வி அமைச்சினதோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதோ முறையான அனுமதி பெறப்பட்டமைக்கான சான்றுகள் இருக்கவில்லை.

### 4.6 பட்டப்படிப்புகளை தொழிற்சந்தைக்கு ஏற்றவாறு மீளாய்வு செய்யப்படாமை

பல்கலைக்கழகத்தில் 06 வருடங்கள் தொடக்கம் 17 வருடங்கள் வரையான காலப்பகுதியில் 13 பாடநெறிகளுக்கான விடயங்கள் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) பல்கலைக்கழகத்தினால் 2013 ஆம் ஆண்டின்போது ரூபா 9,933,284 ஆன பணத்தினை ஒப்பந்த நிறுவனமொன்றிற்கு செலுத்தி பூங்கா பராமரிப்பு சேவையைப் பெற்றுக்கொண்டிருந்ததுடன் ஊழியவழங்கல் சேவையின் மூலம் பெறப்பட்ட 15 ஊழியர்களும் பூங்கா பராமரிப்பு தொடர்பாக ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 631,900 பல்கலைக்கழக நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதிக்காக வாடகைக்குப் பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்ட வதிவிட கட்டங்களுக்காக 2011,2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகள் தொடர்பாக விலைமதிப்புத் திணைக்களத்தின் மூலம் விலைமதிப்பீட்டறிக்கை வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான மாதாந்த வாடகைத் தொகைகளுக்கு மேலதிகமாக நூற்றுக்கு 200 வீதம் வரை உயர்ந்த விலைக்கு 14 வீடுகள் வாடகைக்குப் பெறப்பட்டதால் மீளாய்வாண்டின்போது ரூபா 1,296,000 ஆக பணம் செலவிடப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்தினால் 2013 ஆம் ஆண்டிற்காக மாணவர் விடுதிக்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட 34 வீடுகளுக்காக மாதாந்த வாடகை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் விலைமதிப்பீடு செய்யப்படாமல் வீட்டு உரிமையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விலைகளை அடிப்படையாகக் கொண்டு வாடகை கொடுக்கப்பட்டதால் ரூபா 16,296,000 வருடாந்த வாடகையாக பல்கலைக்கழக நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### 5.1 செயற்பாட்டுத் திட்டம்

2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயற்பாட்டுத் திட்டத்தினுள் அடையப்பட வேண்டிய பௌதீக இலக்குகள் குறிப்பாக காட்டப்பட்டிருக்காமையால் அச் செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்கியதாக பல்கலைக்கழக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தனவா எனப் பரிசீலனை செய்வதற்கு முடியாதிருந்தது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 2002 ஆம் ஆண்டின்போது நிறுவப்பட்டிருந்ததுடன் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டுவரை பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் பரந்தளவில் விரிவுபடுத்தப்பட்டிருந்தும் அந்த நடவடிக்கைகள் யாவற்றையும் உள்ளடக்கப்படக்கூடிய வகையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மறு சீரமைக்கப்பட்டிருக்கவில்லை. உதவி உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் கணிணி உதவியாளர் உட்பட 03 பேர் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் கல்விசார் செயலாற்றல் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின்போது 06 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானம் நூற்றுக்கு 244 வீதத்திற்கு மேற்பட்டிருந்ததுவும் 05 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட வருமானம் நூற்றுக்கு 58 வீதத்திற்கு குறைவடைந்திருந்ததும் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் 19 செலவின விடயங்களின் செலவு அதிகரிப்பு நூற்றுக்கு 91 வீதமாகவும் 20 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கில் சேமிப்பு நூற்றுக்கு 48 வீதமாகவும் இருந்தன. அதற்கமைய, பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் வினைத்திறமையீனங்கள் காலத்திற்குக் காலம் உபவேந்தருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகளுக்கு விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) மனித வள முகாமைத்துவம்
(ஆ) நிலையான சொத்துக்களின் கட்டுப்பாடு
(இ) ஒப்பந்த கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) வாகனக் கட்டுப்பாடு
(ஊ) உடன்படிக்கைசெய்யப்பட்ட சேவைகள் மற்றும் ஒப்பந்த நிருவாகம்